ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவாராய நம:

ஆர்யதர்மம்.

நாம் சுகமாகவே இருக்கவேண்டுமென்று ஸர்வபிராணிகளும் ஸ்வபாவமாகவே ஆசைப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் இஷ்டப்படி சுகப்படுவதில்லை யென்பதுமாத்திரமல்ல, நினைத்ததற்கு விபரீதமாக துக்கத்தையும் அடைகின்றார்கள், இப்படிநேருவது ஸ்வதந்திரனாயிருக்கும் பக்ஷத்தில் சரியல்ல ஸ்வதந்திரனாயிருப்பானாகில், தான் நினைத்தபடி யெல்லாமல்லவா ஸாதித்துக்கொள்ளவேண்டும், இச்சித்தப்படி ஸாதித்துக்கொள்ள முடியாமையால் இவர்கள் ஸ்வதந்திரர்களில்லை யென்பது ஸ்பஷ்டமாகிறது, பராதீனப்பட்டவனுக்குத்தான் நினைத்தபடிநடக்காது, அதனால் பிராணிகளெல்லாம் பராதீனமாயிருக்கிறார்களென்பது வெளிப்படை, ஸ்வாதந்திரியமில்லாமல் பராதீனமாயுமிருப்பவன் தனக்கு ஒருகாரியம் கைகூடிபயன்படுமாறு செய்துக்கொள்ளவேண்டுமானால் எவனுக்குஅதீனமாயிருக்கிறானோ! அவனுக்குக்கீழ்படிந்து அவன்கட்டளையைமீறாமல் அவன் ஆக்ஞைசெய்தபடிநடந்து அவனது தயவுக்குப் பாத்திரமாகவேண்டும். அப்படியானால் நினைத்தகாரியம் கைகூடிவரும், அதன்பயனையும் பெறலாம், சுகமாயிருக்கலாம், இன்றேல் துக்கத்தைத்தானடையலாம். ஆகவே நாமெல்லோரும் எவருக்கு அதீனமாயிருக்கிறோமென்று முதலில் கெவனிக்கவேண்டும், இந்த விஷயம் பொதுவாயெல்லோருக்குமே தனக்குத்தானாகத்தெரிந்துகொள்ளமுடியாது, ஒரு பெரியாரைக் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டும், அத்தகையபெரியாராக ஒவ்வொருவர் ஒவ்வொருவரை ஆசிரயிக்கின்றனர் அவரவர்நினைத்தபெரியார்சொற்படி நடந்தவர்களுக்குநினைத்தகாரியம் நிறைவேறாதபடியால் அவர்களெல்லாம் பெரியோராகமாட்டார்களென்பது அவரவர்களுக்கும் அனுபவத்திற்கு வந்த விஷயம். ஆகையால் எவன் ஸ்வதந்திரனோ! ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும், சக்தியுள்ளவனோ, அவன்தான் பெரியோனவன், அவனைத்தான் ஈசுவரனென்பார்கள் நாமெல்லோரும் அவனதீனமாகத்தானிருக்கிறோம். அவன் ஆக்ஞைப்படி நடந்தாற்றான் நாம்க்ஷேமத்தையடையலாம், சுகப்படவேண்டுமென்று ஆசைப்பட்டதால் மாத்திரம்பயன்படாது, பரமேசுவரனுக்கு ஸ்வாதீனமானநாம் அவனது ஆக்ஞைப்படி நடக்காமல் கண்டபடி யிருந்தோமாகில் அவனதுகோபத்திற்குத்தான் ஆளாகுவோம், அப்பொழுதுநாம் ஸுகப்படுவதெங்கே? ஆகையால் பரமேசுவரனது மீளாக்கோபத்திற்காளாகாமல் பிரஸாதத்திற்குப்பாத்திரமாகவேண்டியதற்காக அவனது ஆக்ஞையான சுருதிஸ்மிருதிகளிற் கூறியபடி வர்ணாசிரம தர்மத்தை விதிவழுவாது அனுஷ்டித்துவரவேண்டும் அப்படியானால் அவர் பிரஸாதிப்பார் காரியம் கைகூடும் இஹத்திலும் பரத்திலும்க்ஷேமத்தையடைந்து ஸுகமாயிருக்கலாம், ஆகையால் யாவருமப்படியே நடந்து ஸுகித்திருப்போமாக. சுபம்!

பத்திராதிபர்,

ஆர்யதர்மம்.

சுக்ல-ஸு சித்திரை-மீ உஎஉ

ஸம்ஸ்காரம்.

(8) உபநயனம்.

உபநயனம் என்ற ஸம்ஸ்காரம் துவிஜாதிகளுக்குமாத்திரந்தான் விதிக்கப்பட்டிருக்கின்றது. சூத்திரர்களுக்கு இது கிடையாது, கர்ப்பாதானாதி ஸம்ஸ்காரங்கள் சூத்திரர்களுக்கு உண்டோவெனில் உண்டு. இதைப்பற்றி கமலாகரபட்டாசாரியாரவர்கள் தாமியற்றிய 'சூத்திரகமலாகரம்' என்னும் கிரந்தத்தில் சூத்திரர்களுக்கு கர்ப்பாதானாதிகிரியைகளை பௌராணிகமந்திரபூர்வகமாக நிரூபித்திருக்கின்றார். அதன்படி செய்யவேண்டும். அதில் சூத்திரர்களுக்கு இவ்வளவு ஸம்ஸ்காரம் செய்யவேண்டுமென்று விசாரஞ்செய்து தீர்மானித்திருப்பதுடன் அவைகளின் பிரயோகங்களும் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றது. இவைபோல் உபநயநமும் ஏன் கூறப்படவில்லையென்றால் உபநயநம் வேதாத்தியயனத்திற்கு அங்கமாக விதிக்கப்படுகின்றது. இவர்களுக்கு வேதாத்தியயனத்தில் அதிகாரமில்லாதபடியால் உபநயநம் விதிக்கப்படவில்லை, ஏன் அதிகாரமில்லையென்றால் கூறுகின்றார்கள், பிராமணாதிகள் காயத்ரீமுதலான சந்தஸ்ஸோடு ஸ்ருஷ்டிக்கப்பட்டபடியால் இவர்களுக்கு வேதாதிகாரமுண்டு. சூத்திரர்கள் ஒரு சந்தஸ்ஸோடாவது ஸ்ருஷ்டிக்கப்படாமையால் அவர்களுக்கு வேதாதிகாரம் கிடையாது. அப்படியேன் ஸ்ருஷ்டிக்கப்படவில்லை என்ற கேள்வி ஸ்ருஷ்டிகர்த்தாவினிடம் கேள்க்கவேண்டியது. ஆகவே வேதாதிகாரமில்லாதபடியால் உபநயநமும் கிடையாது. ஆனால் அது துவிஜர்களுக்குத்தான் விதிக்கப்படுகின்றது. அதனாற்றான் ப்ராம்மணாதிகளுக்கு துவிஜர்கள் என்று பெயர். இரண்டுதடவை பிறப்பவர் என்று அதன் பொருள். முதலில் தாய்தந்தையரிடமிருந்து ஜனிக்கின்றார்கள். உபநயநத்தால் இரண்டாவது ஜனிக்கின்றார்கள். அந்த இரண்டாவது பிறவியில் இவனுக்குத்தாய்

காயத்திரியும், தகப்பன் ஆசாரியனுமாவான், அந்த உபநயனம் பிராமணனுக்கு கர்ப்பத்திலிருந்து 6, 7, 8-வது வருஷங்களிலும் க்ஷத்திரியனுக்கு 9, 10, 11-வது வருஷங்களிலும். வைசியனுக்கு 10, 11, 12-வது வருஷங்களிலும் செய்யவேண்டும். அந்த 3-வருஷங்களும் முக்கியகாலங்களாகும் என்று ஆபஸ்தம்பமுனிவரது மதம். மற்ற மஹரிஷிகளுக்கோவெனில் பிராமணனுக்கு 8-வது வயதும் க்ஷத்திரியனுககு 11-வதும் வைசியனுக்கு 12-வதும்தான் முக்கியகாலமென்று மதம். குலாசாரத்துக்குத்தக்கபடி இவ்விரண்டினுள் ஏதாவது ஒரு மதத்தை வியவஸ்தையாகக் கொள்ளவேண்டும். இப்படி வருஷக்கணக்குக் குறிப்பிட்டதின் அபிப்பாயமிதுவாம் பிராமணன் காயத்ரீசந்தஸ்ஸோடும். க்ஷத்திரியன் திரிஷ்டுப் சந்தஸ்ஸோடும், வைசியன் ஜகதீசந்தஸ்ஸோடும். ஸிருஷ்டிக்கப்பட்டதாக சுருதி கூறுகின்றது. அந்தந்தசந்தஸ்ஸுகளின் ஒருபாதத்திர்க்கு எவ்வளவு அக்ஷாங்களோ அந்த ஸங்கியை புள்ளவருஷங்களில் அவரவர்களுக்கு உபனயநம் விதிக்கப்படுகிறது. அதில் காயத்ரீசந்தஸ் ஸுக்கு. மூன்றுபாதங்களும். இருபத்நிநான்கு அக்ஷாங்களுமாகும். ஆகவே. காயத்திரியின். ஒருபாதத்திற்க்கு. எட்டுஅக்ஷாங்கள். ஆனதால் எட்டாவதுவயதில் பிராமணனுக்கு உபநயனம் செய்யவேண்டும். இதுபோல் திரிஷ்டுப் சந்தஸ்ஸின் ஒருபாதத்திற்கு. பதினோறுஅக்ஷாங்களாம். அதனுல் க்ஷத்திரியனுக்குப்பதினோராவதுவயதில்உபநயநமாம். இம்மாதிரியே ஜகதீசந்தஸ்ஸின் ஒருபாதத்திற்கு. பன்னிரண்டு அக்ஷாங்களாம். அதனுல் வைசியனுக்கு பன்னிரண்டாவது வயதில் உபநயநமாம். ஐந்தாவது வயதுமுதல் காமியகாலங்களாம். முக்கியகாலம் தவறினுல் கௌணகாலத்தில்செய்யவேண்டும். அந்தகௌண காலமென்பது, அவரவர்களது சந்தஸ்ஸின் இரண்டுபாதத்திற்குள்ள அக்ஷாஸங்கியையின் ஸமமானவருஷங்களாகும். அதாவது பிராமணனுக்கு எட்டுக்குமேல் பதினறுபரியந்தமும் க்ஷத்திரியனுக்கு பதினொன்றுக்குமேல் இருபத்திரெண்டுவருஷபரியந்தமும், வைசியனுக்கு பன்னிரண்டுக்குமேல் இறுபத்திநான்குவயதுபரியந்தமும் கௌணகாலங்களாகும் இந்த கௌணகாலம் தவறக்கூடாது. இந்த கௌணகாலமும் தவறிவிட்டால் விராத்தியர்களாகிவிடுகின்றனர். இதற்குமேல் கௌணகாலம் கிடையாது. அப்படி கௌணகாலத்திலும் உப

நயனம் செய்யப்படாதவர்களோடு வித்யாஸம்பந்தங்களையும் விவாஹஸம்பந்தங்களையும் செய்யக்கூடாது. கௌணகாலம் தவறிப்போனவர்களுக்கு விராத்தியஸ்தோமம் என்ற யாகம் பிராயச்சித்தமாக விதிக்கப்படுகின்றது. உபநயனம் விவாஹம் இவைகளாகாதவனுக்கும் வசனபலத்தால்இந்த விராத்தியஸ்தோமயாகத்தில் அதிகாரமுண்டு, அல்லது வஸிஷ்டர்கூறிய பிராயச்சித்தத்தையாவது செய்யலாம். அதாவது யவக்கஞ்சியைக்கொண்டு இரண்டுமாதமும் பாலைக்குடித்துக்கொண்டு ஒருமாதமும் ஆமிக்ஷையை (தயிரின் ஓர்வித விகாரம்) புஜித்துக்கொண்டு பதினைந்து நாளும் நெய்யை ஸாப்பிட்டுக்கொண்டு எட்டுநாளும் யாசிக்காமல் கிடைத்ததைப் புசித்துக்கொண்டு ஆறுநாளும் சுத்ததீர்த்தத்தை அருந்தி மூன்றுநாளும் சுத்த உபவாஸமாக ஒருநாளும் விரதத்தினுடன் இருக்கவேண்டும். இதற்கு உத்தாலகவிரதமென்றுபெயர், அல்லது ஆபஸ்தம்பர் கூறிய பிராயச்சித்தத்தையாவது இரண்டு மாதம் செய்யவேண்டும். இப்படிப் பிராயச்சித்தம் செய்துகொண்டவர்களுக்கு உபநயனம் செய்யலாம். பிராயச்சித்தம் செய்துகொள்ளாவிடில் உபநயனமும் செய்விக்கக்கூடாது, அத்தியயனமும் செய்துவைக்கக்கூடாது. சுபம்.

பா—ர்.

ஸ்ரீராமஜெயம்.

வர்ணாச்ரமதர்மஸம்ரக்ஷணி.

இவ்வுலகத்தை சீர்திருத்துவதற்காக அடிக்கடி பரமாத்மா அவதாரம்செய்கிறார். அதர்மம் மேலிட்டு தர்மம் குறைந்து நான்குவர்ணங்களும் தங்கள்தங்கள் தர்மத்தைவிட்டு மனம்போனபோக்கெல்லாம் நடக்கின்றகாலத்தில் ஸாக்ஷாத் பரமாத்மா அவதாரம்செய்கிறார் என்று நாம் கீதைமுதலான மஹாக்ரந்தங்களிலிருந்து நன்கு அறிந்துகொள்ளலாம்.

यदा यदा हि धर्मस्य ग्लानिर्भवति भारत ।
अभ्युत्थान मधर्मस्य तदात्मानं सृजाम्यहम् ॥

இந்த ச்லோகத்தின் அர்த்தம் மேலே கூறப்பட்டுவிட்டது.

அடுத்த ச்லோகத்தில் ஸாதுக்களைக்காப்பாற்றுவதற்காகவும் துஷ்டர்களை நாசம்பண்ணுவதற்காகவும் நான் அடிக்கடி அவதாரம்செய்கின்றேன் என்று தெரிவிக்கின்றார். தான் சொன்னபடியே தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும், அதர்மத்தை ஓட்டுவதற்கும் ஜனங்களுக்கு ஸன்மார்க்கத்தைக்காட்டுவதற்கும் ப்ராஹ்மண்யம் செழிக்கவும், வேதாத்யயனம் ஓங்கவும், நாஸ்திகதை மங்கவும், பரமாத்மா அநேக அவதாரம் செய்திருக்கிறார்.

இந்த ஒவ்வொரு அவதாரங்களிலேயும் தர்மத்தின் ஸ்தாபனமே பரமாத்மாவின் முக்கிய நோக்கம் என்று

चातुर्वर्ण्यं च लोकेऽस्मिन् स्वे स्वे धर्मे नियोक्ष्यति ।

என்ற ச்லோகத்தினால் தெரிகிறது.

ப்ராஹ்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நான்குவர்ணங்கள் ஈசுவரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டன. இதற்கு வேதமும் கீதையில் பரமாத்மா சொல்லியிருக்கும் வசனமும் நமக்கு ப்ரமாணம். வேதம் अपौरुषेयं என்றும் (ஒரு புருஷனால் ஏற்படுத்தப்படவில்லை) ஜைமினிமஹரிஷி மீமாம்ஸாசாஸ்திரத்தில் முதல் அத்தியாயம் முதல் பாதம் கடைசி அதிகரணத்தில் நன்கு நிரூபித்திருக்கின்றார். இன்னும் மனுமுதலிய ஸ்மிருதிகர்த்தாக்களும் வேதம் अपौरुषेयं என்பதை நன்கு நிரூபித்திருக்கிறார்கள்.

இன்னும் நமது மனுவானவர் ஹேதுவாதங்களைக்கொண்டு வேதப்ராமாண்யத்தை கண்டிக்கின்றவர்களும் வேதத்தை நம்பாதவர்களும் ஊரிலிருந்து விரட்டத்தகுந்தவர்கள் என்று கூறியிருக்கின்றார். இன்னும் 5-ம் அத்தியாயத்தில் வேதத்தை கைவிட்டபடியினாலேயும் சதாசாரத்தை நீத்தபடியினாலேயுமேமாணத்தையும் கஷ்டத்தையும் அடைகின்றார்கள். ப்ராஹ்மணர்கள் மாத்திரமல்ல, எல்லா வர்ணத்தவர்களும் தங்கள்தங்கள் ஜாதிக்கு உரியதான தர்மத்தை அனுஷ்டிக்கவேண்டும். க்ஷத்திரியஜாதியில் பிறந்தவன் ப்ராஹ்மணர்கள் செய்யவேண்டிய காரியத்தையும், சூத்திரஜாதியில் பிறந்தவன் வைசியர்கள் செய்யவேண்டிய காரியத்தையும் அநுஷ்டிக்கக்கூடாது. அந்தந்த ஜாதியில் பிறந்த ஒவ்வொருவனும் தங்கள் தங்கள் ஜாதிக்கு ஏற்பட்ட தர்மங்களையே அனுஷ்டிக்கவேண்டும். இதரர்களுடைய தர்மத்தை அநுஷ்டித்தால் க்ஷேமம் உண்டாகமாட்டாது என்று சொல்லி

யிருக்கிறார். பின்னும் என் சொந்த பந்துக்களான பீஷ்மர்முத லானவர்களை நான் கொல்லமாட்டேன். பிக்ஷாடனம் செய்தே ஜீவனம் செய்வேன் என்று சொன்ன அர்ஜுனனை ஸர்வக்ஞா ரான பரமாத்மா ஸ்வதர்மத்தை விடக்கூடாது என்று போதித் திருக்கின்றார், நமது தேசமோவெனில் முன்காலத்தில் மிகவும் க்ஷேமத்தையடைந்திருந்தது. அதற்குக் காரணம் எது? தர் மத்தைக் கைவிட்டவர்களும் அதர்மத்தைக் கைக்கொண்டவர் களும் வேதசாஸ்த்ரங்கள் முந்தாநாள்நாலாநாள்ஏற்பட்டதென்று சொல்லுகிறவர்களும் வ்யாஸர்முதலான மஹரிஷிகள் இப்பொ ழுதுதான் உண்டானவரென்று பிதற்றுகின்றவர்களும் கிடை யாது. தர்மத்தை ஸரிவர அனுஷ்டித்தபடியினாலேயே அந்தந்த ஜாதியில் பிறந்தவர்கள் தங்கள் தங்கள் ஜாதிக்கு ஏற்பட்ட விதி களை அநுஷ்டித்தபடியினாலேயும் வேதத்தில் பூர்ணமான விசு வாஸம் இருந்தபடியினாலேயும் தேசம் செழித்துவந்தது.

தற்காலத்திலோவெனில் Modern Civilisation (தற்கால நாகரீகம்) என்கிற பேய் தலைவிரித்தாட, தர்மம் ஓட, அதர்மம் நாட, தாரித்ரியம் நடனமாட ரத்தம் ஒன்று என்னும் பேச்சு எங்கெங்கும் தலைப்பட ஆரம்பித்துவிட்டது. ப்ராஹ்மணர்களும் சூத்திரர்களும் தங்கள் தங்களுக்கு ஏற்பட்ட தர்மத்தை ஸரிவர அனுஷ்டிக்கின்றதில்லை,

ஐயோ! காலத்தின் கொடுமையோ கலியின் பெருமையோ ஏழரை நாட்டு சனியன் நமது நாட்டைப் பிடித்துவிட்டானோ தெரியவில்லை. ப்ராஹ்மணர்கள் நல்லகுலத்தில் பிறந்தவர்களும் கூட வேதம் 2000 or 2500 வருஷத்துக்கு முன்பு தான் ஏற்பட் டிருக்கவேண்டும் வ்யாஸர் முதலான மஹரிஷிகள் சொல்லுவது தப்பு Sinclair. Stone. J. c. Allen Dutt. இவர்கள் சொல்லு வதே சரி. ஆராய்ச்சி செய்யும் இவர்கள் (Research workers) சொல்லுவதுதான் சரி என்று நம்புகிறார்கள். அந்த நம்பிக்கையி னாலேயும் வ்யாஸர் முதலிய மஹரிஷிகளின் வார்த்தையில் அவ நம்பிக்கையினாலேயும் பெரியவர்கள் (மஹரிஷிகள்) சொன்ன வார்த்தைகளைக்கேழ்க்காததினால் வந்த திண்டாட்டமே இது. கலி மஹாராஜன் கொண்டாட்டத்துடன் அட்டஹாஸம் செய்யும் காலம் வந்துவிட்டது, முன்காலத்திலோ வெனில் தர்மத்தையே ஜெனங்கள் பெரிதாக நினைத்தார்கள் அவர்களின் சம்மதியில்லா

மல் அரசர்கள் ஒருகாரியமும் செய்வதில்லை. ஸ்ரீமத் ராமாயணத்தில் மாக்ஷிமைதங்கிய தசரதமகாராஜா, தனது மைந்தனான ஸ்ரீ ராமசந்திரமூர்த்திக்கு முடிசூட்டவேண்டுமென்று ஆசைகொண்டார், உடனே ப்ராஹ்மணர் முதலியவர்களின் அநுமதியையும் கேட்டார். இவ்வளவு பெருமையும் தர்மத்தை அநுஷ்டிப்பதனாலேயே ப்ராஹ்மணர் முதலானவர்களுக்கு உண்டாயிற்றென்று புராணங்களிலிருந்து நாம் நன்கு தெரிந்து கொள்ளலாம்.

தற்காலம் வந்திருக்கும் கஷ்டத்திற்கும் ஏழ்மைத்தனத்திற்கும் அநேக ரோகங்களுக்கும் அதர்மத்தைத் தவிர வேறு ஒன்றும் காரணமாகமாட்டாது என்பது திண்ணம். ஆகையால் தேசத்தின் முன்னேற்றத்தை நாடினவர்கள் தர்மத்தை ஆங்காங்கு உபதேசிக்கவேண்டும், வேதாத்யயனத்தின் ஆவச்யகத்தையும் (Necessity) ஸந்த்யாவந்தனம் முதலிய நித்யகர்மாக்களின் மஹிமையையும் தேசந்தோறும், ஊர்தோறும், வீடுதோறும், உபதேசிக்க வேண்டும். ஸந்த்யாவந்தனமும் வேதாத்யயனமும் ஒவ்வொரு ப்ராஹ்மணன் வீட்டிலேயும், சரிவர பாவி விட்டதேயானால் ஒரு காலத்திலும் நமக்கு கஷ்டம் உண்டாகமாட்டாது. இன்னும் நமக்கு ஈஸ்வரன் ஓர் பெரிய சௌகரியத்தைத் தந்திருக்கிறார் அஃதென்னவெனில் வேதாத்யயனம் செய்கின்றவர்கள் இத்தனாவது ஸெக்ஷன்படி ஜெயிலுக்கு அனுப்பப்படுவார்கள் என்று யாதொரு சட்டமும் தற்காலத்தில்நடையிலில்லை, அப்படி யில்லாமலிருந்தும் நமது தேசத்தவர்கள் வேதத்தைஇழிவாய் கருதுகின்றார்கள் அத்யயனம் செய்கின்றவர்களை வைதிக (Brute) என்றும் ஏளனம் செய்கின்றார்கள். யாராவது ஒருஏழை தனது பிள்ளையை அத்யயனம் செய்யும்படி ஏவினாலும் அவனுடைய தாயார்களும் மற்றவர்களும் நதியில்குழந்தையைத்தள்ளிவிட்டவர்கள்எவ்வளவு வருத்தப்படுவார்களோ அவ்வளவுவருத்தத்தை அடைகின்றார்கள்

வேதாத்யயனமே நமக்குஸர்வஸ்வம்,வேதமேநமக்குத்தாயார், வேதமே நமக்கு ரக்ஷை, வேதமே நமக்குஹிதபோதகம் எல்லாவற்றையும் அறிந்த மஹரிஷிகள் (கௌதமர் முதலானவர்கள்)

ओं वेदो धर्ममूलम् ।

என்று சொல்லியிருக்கின்றார் அதற்கு வ்யாக்யானம் செய்த ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரரான ஹரதத்தாசாரியாரும் பின்வருமாறு சொல்லியிருக்கின்றார்

चत्वारो वेदा ऋग्यजुस्सामात्मकास्त एव धर्मे प्रमाणम् ।
न योगिप्रत्यक्षं नानुमानं नार्थापत्तिर्नशक्याद्यागमः ।
तेन तन्मूला एवोपनयनादयो धर्मा वक्ष्यन्ते ॥

"வேதமே நமக்கு தர்மத்தில் ப்ரமாணம். அனுமானமும் அர்த்தாபத்தியும் பௌத்தன்முதலானவர்களின் சாஸ்திரமும் நமக்கு ப்ரமாணமாகமாட்டாது. ஆகையால் வேதத்தை மூலமாகவுடைய உபநயனம் முதலானவைகள் தர்மங்கள். அவைகளை இங்கு சொல்லப்படுகின்றன."

இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளவேண்டியதென்ன? வேதத்தைத்தவிர மற்றவைகளுக்கு ப்ராமாண்யம் கிடையாது. இப்படி சொல்வதால் நமக்கு ஒரு ஸந்தேகம் உண்டாகலாம். வேதத்தைத்தவிர வேறுபட்டதான மனு, பராசரர், ஹாரீதர், சங்கர், புதர், லிகிதர் முதலிய மஹரிஷிகள் எழுதின ஸ்மிருதிகள் அப்ரமாணம் (Unauthoratative) என்று தோணலாம். வேதத்தையனுஸரித்ததான அந்த ஸ்மிருதிகளும் வேதவிரோதமில்லாத மற்ற வாக்கியங்களும் நமக்கு ப்ரமாணந்தான். வேதத்திற்கு விரோதமான ஸ்மிருதிவாக்கியம் நமக்கு ப்ரமாணமில்லையென்று ஜைமினிமஹரிஷி பூர்வமீமாம்ஸை முதல்அத்தியாயம் மூன்றுவது பாதம் இரண்டு மூன்று அதிகரணங்களில் நிருபணம் செய்திருக்கின்றார்.

विरोधे त्वनपेक्षं स्यात् असति ह्यनुमानम् ।

இந்த அதிகரணத்தை பாட்டதீபிகாவ்யாக்யாதா சம்புபட்டர் பிரபாவளியில்

विरुद्धानामपि आप्तमुक्तहेतोरस्तु प्रामाण्यं इत्याक्षेपनिरासात् आपवादिको संगतिः सूचिता ॥

ஆகையினால் வேதமே நமக்கு ப்ரமாணம், வேதத்தையநுஸரித்த ஸ்மிருதிவாக்யங்களும் புராணவாக்யங்களும் ப்ரமாணம். வேதத்தினால் எது போதிக்கப்படுகின்றதோ எது நம்முடைய க்ஷேமத்திற்கும் மேல்லோகசுகத்திற்கும் காரணமாகின்றதோ அதுவேதர்மம். இதேமாதிரியாக ஜைமினிமஹரிஷி

चोदनालक्षणोऽर्थो धर्मः इति ।

என்று நன்குகூறியிருக்கின்றார். இந்த ஸூத்திரத்தைவ்யாக்யானம் செய்கின்ற காலத்தில் ஸபரஸ்வாமி மிகவும் அழகாக தர்மத்தின் லக்ஷணத்தைக் கூறியிருக்கின்றார். ஆகையினால் வேதத்தையும். வேதத்தில் சொல்லப்பட்ட தர்மங்களையும் கைவிட்ட நமக்கு ஒரு காலத்திலேயும் க்ஷேமம் கிடைக்கமாட்டாது.

தாய் தந்தையர்களை ஆஹாரமில்லாமல் திண்டாடவிட்டு நூற்றுக்கணக்கான ப்ராஹ்மணர்களுக்கு ப்ரதிதினமும் அன்னமளிக்கின்ற ஒருவனுக்கு எப்படி புண்யமுண்டாகும்? உண்டாகவே மாட்டாது. அதுபோல் நமது வேதமாகிற தாயாரையும் அவளுடைய குழந்தையான தர்மதேவதையையும் ஆதரிக்காமல்விட்ட நமக்கு ஒருபொழுதும் க்ஷேமம் கிடைக்கமாட்டாது. ஆகையினால் அத்யபனம் முதலான ஆறுகாரியங்களிலேயும் அதிகாரம் அடைந்த ப்ராஹ்மணர்கள் ஒருகாலத்திலேயும் வேதத்தைக் கைவிடக்கூடாது. வேதத்தின் பெருமையினாலேயும் வேதமந்த்ரத்தின் கௌரவத்தினாலேயும் நமது மஹரிஷிகளுக்கு அற்புதமான ஸாமர்த்தியங்கள் உண்டாயின. வேதாத்யயனம் செய்வதே பெரிய தபஸ் என்று மௌத்கல்யமஹரிஷி சொல்லுவதாக த்ரிகாலத்தையும் அறிந்த அநாதியான நமது வேதம் சொல்லுகின்றது. மனுவும் தபஸ் பண்ணுகின்ற ப்ராஹ்மணன் எப்பொழுதும் வேதத்தை அப்பியாஸம் செய்யவேண்டும், வேதாத்யயனம் செய்யாத ப்ராஹ்மணர்கள் நாமமாத்ரதாரிகள் என்று மனுஸ்மிருதியிலேயும் ஸ்காந்தபுராணம் காசிகண்டத்திலேயும்

यथा दारुमयो हस्ती यथा चर्ममयो मृगः ।

என்கிற ச்லோகத்தினால் நன்கு நிரூபித்திருக்கின்றார். இன்னும் வேதத்தின் பெருமையையும் ப்ரம்மயஜ்ஞப்ரச்னம் சொல்லுகின்ற மஹான்களுடைய பெருமையையும் அருணத்தில் நன்கு கூறப்பட்டிருக்கின்றது. அதேமாதிரியாக ஸ்காந்தத்தில் ருத்ரத்தின் பெருமையை 21-ம் அத்தியாயத்தில் 14-வது ச்லோகத்திலிருந்து வ்யாஸமுனிவர் நன்கு கூறியிருக்கின்றார்.

एष एव परो मन्त्र एष एव परं तपः ।
रुद्राध्यायजपः पुंसां परं कैवल्यसाधनम् ॥

महापातकिनः प्रोक्ता उपपातकिनश्च ये ।
रुद्राध्यायजपात्सद्यस्तेऽपि यान्ति पराङ्गतिम् ॥

அதேமாதிரியாக சாதாதபர், யாக்ஞவல்க்யர், சங்கர். அத்திரி முதலானவர்கள் ருத்ரத்தை 11-தடவை ஜெபிக்கின்றவர்கள் பஞ்சமஹாபாதகத்தினாலேயும் விடுபடுகின்றனர் என்று கூறியிருக்கின்றனர். வாயுபுராணத்தில்

ममभावं समुत्सृज्य यस्तु रुद्राञ्जपेत्सदा ।
स तेनैव च देहेन रुद्रस्सञ्जायते ध्रुवम् ॥
जपेनानेन विप्रेन्द्रा नृपाश्चान्ये द्विजातयः ।
हित्वैवं सकलं पापं गताः शिवपुरं पुरा ॥
अहं च परमेशस्य सामीप्यं लब्धवांस्तथा ।

என்கிற ச்லோகங்களால் ருத்ராத்தியயனம் செய்கின்றவர்களின் பெருமை கூறப்பட்டுள்ளது. இன்னும் சில ஸ்மிருதிகளில் **चमकम् पुरुषसूक्तम्** இவைகளைப் படிக்கின்றவர்கள் சிவஸாயுஜ்யத்தை அடைவார்கள் என்று சொல்லியிருக்கின்றது. இப்படியே ஒவ்வொரு வேதபாகங்களையும் ப்ரதிதினமும் பாராயணம் பண்ணுகின்றவர்களுக்கு பாபலேசமே கிடையாது

எவன் பரமக்ஷேமமாய் பாபமில்லாமல் வஸிக்கவேண்டுமென்று நினைக்கின்றானோ அவன் கட்டாயம் வேதத்தை அத்யயனம் செய்யவேண்டும். இம்மாதிரியே நமது பகவத்பாதாளும் ஸோபானபஞ்சகத்தில் முதல்ச்லோகத்தில் கூறியுள்ளார். ஆகையினால் வேதாத்யயனமே முக்யமென்றும் ஹேதுவாதங்கள் செய்யக்கூடாதென்றும் மேலேயே சொல்லிவிட்டோம். ஆனால் சிலர் கக்ஷிசொல்ல சாமர்த்தியம் இல்லாத மனுமுதலான ஸ்மிருதிகாரர்கள் வேதத்தை நம்பாதவர்களை விரட்டிவிடவேண்டும் என்று சொன்ன வார்த்தை நம்பத்தகாதது என்று நினைப்பார்கள். அதற்கு நாம் பதில் கூறுகின்றோம்.

तर्काप्रतिष्ठानादप्यन्यथाऽनुमेयमिति चेदेवमप्यविमोक्षप्रसङ्गः ॥

என்று வ்யாஸமுனிவர் வேதாந்த சாஸ்த்ரம் **उत्तरमीमांसा** இரண்டாவது அத்யாயம் முதல் பாதம் 11-வது ஸூத்ரம் சொல்லியிருக்கின்றார். இதற்கு வ்யாக்யானம் செய்த பாஷ்யார்த ரத்னமாலையில் பின்வருமாறு காணலாம்.

पुरुषमतिवैरूप्याद्यतो भवन्त्यप्रतिष्ठितास्तर्काः ।
उत्प्रेक्षिताश्च निपुणं कुशलैरनुमातृभिश्च ये तर्काः ॥
अन्यैरभियुक्ततरैराभास्यन्ते हि ते च सर्वेऽपि ।
अथ सुप्रसिद्धकीर्तेः कपिलस्य स्यादप्रतिष्ठितस्तर्कः ॥
इति नात्र शङ्कनीयं प्रसिद्धमहसो भवन्ति तीर्थकराः ।
बहवः कणभुक्प्रमुखा विप्रतिपत्तिश्च दृश्यते तेषाम् ॥

ஆகையினால் ஸ்மிருதிகாரர்களான மஹரிஷிகள் உத்திரவிட்டபடி நாம் தர்மங்களை அனுஷ்டானம்செய்து வேதத்தை பூர்ணமாய் நம்பி அதில் சொல்லப்பட்ட தர்மங்களை அனுஷ்டித்து க்ஷேமத்தை அடயவேண்டும். இந்த வைதிகமான தர்மங்களை ஜெகத்தில் பரவச்செய்யவேண்டுமென்றே காமகோடி பீடத்தை தற்காலம் அலங்கரிக்கும் நமது குரு நாதாள் இந்த "ஆரிய தர்மம்" என்கிற பத்திரிகையை ஆரம்பித்திருக்கின்றார் இப்பத்திரிகையின் பெயர் "ஆரிய தர்மம்" முதலில் ஆரியர்கள் என்பது யார் தர்மம் என்றால் என்ன இவைகளை நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும், இதுகளை ஆங்காங்கு நாம் எழுதுவோம் ஜெகத்தில் தர்மத்தை நிலைநாட்டவேண்டுமென்றே அவதாரம்செய்த நமது ஆசாரியாளின் உத்திரவை சிரஸால் வகித்து வர்ணாச்ரம தர்மத்தை மிகவும் விஸ்தாரமாய் எழுதுவதற்கு உத்தேசித்திருக்கின்றேன் நமது ஆசாரியாளின் உத்திரவை சிரஸால் வகித்து என் சிற்றறிவுக்கு எட்டின வரையில் ஏதோ எழுத ஆரம்பிக்கின்றேன்.

(இன்னும் வரும்.) விசுவநாதசாஸ்திரிகள்.

சுபமஸ்து. விஷ்ணம்பேட்டை

ஸ்ரீமான் அப்பய்ய தீக்ஷித சரிதம்.

(237-வது பக்கத்தொடர்ச்சி.)

பிறகு சிதம்பரகவி வர்ணித்ததாவது

किं ब्रूमः कविवागगोचरमिदं माहात्म्यमप्राकृतं
विध्युक्ताध्वरपद्धतिं प्रथयितुं भूमिं गतो वा विधिः ।
आहोस्वित्फणिराट् फणा दशशती श्वेतातपत्रो हरिः
वाप्पयाख्याभिध एष कः कथय वाङ्नोज्जृम्भते भूपते ॥

அரசனே! கவிகளின் வாக்குக்கும் எட்டாத அப்ராகிருதமான இம்மஹானின் மாஹாத்ம்யத்தை என்சொல்வோம்? விதிப்படி யாகமார்க்கத்தைப் பிரகாசப்படுத்துவதற்கு பூமியில் அவதரித்த பிரம்மதேவனே அல்லது ஆதிசேடனின் ஆயிரம்படங்களாகிற வெண்குடையால் ஸேவிக்கப்பட்ட மஹாவிஷ்ணுவோ அப்பய்ய தீக்ஷிதாள் என்ற இம்மஹான் யார் சொல்லும் வாக்கு வெளிக் கிளம்பவில்லை.

उदरभरणमात्राभ्यस्तपाण्डित्यकोला-
हलविलपनशङ्का नैव तस्याग्रतो नः ।
इह हि सरसवाणी श्रीमदप्पय्यसूर्या
जडमपि कविराजं कुर्वती नूनमास्ते ॥

ஆனாலும் அம்மஹானின் கடாக்ஷம்பெறும் ஸபையே யாவரையும் தைர்யமாய்ப் பேசச்செய்யும். அதாவது

வயிற்றுப்பிழைப்புக்காகக் கற்றுக்கொள்ளப்பட்டபாண்டித்யத்தின் ஆரவாரம் மங்கிவிடும் என்ற அச்சம் எங்களுக்கு அவாளுடைய முன்னிலையில் நிகழவில்லை. இச்சபையிலோவெனில் ஸ்ரீமான் அப்பய்யமூர்த்தியின் ஸரஸவாணியானது அன்போடு ஏற்றுக்கொள்ளும் ஜடனையும் நிச்சயமாய்க் கவிராஜனுக்குகிறது.

பிறகு தீக்ஷிதாள் இனிய உண்மைமொழிகளால் துதிக்கப் பட்டு பூரிதக்ஷிணை பட்டுப்பீதாம்பரம் முதலான மரியாதைகளால் பிராமணர்முதலான ஸகலரையும் கௌரவப்படுத்தி சரணம் புகுந்த நாஸிம்மராஜனையும் மேன்மைப்படுத்தி பிராமணர்களால் ஆசீர்வதிக்கப்பெற்றுத் தனது இல்லஞ்சென்றார். அப்போது இடையிலுள்ள நகரங்கள் கிராமங்கள்முதலான இடங்களில் வரவேற்கப்பட்டு அவர்களை அனுக்ரஹித்துத்தனது கிராமஞ்சென்று அக்னிஹோத்திராதி கன்மாக்களை விதிப்படி நடத்திக்கொண்டும் பாடப்ரவசனஞ்செய்துகொண்டும் வாழ்ந்தனர்.

இந்த வாஜபேய யாகத்தில் மஹிமை ஸர்வதோமுகமாக எங்கும்பரவவே, அதைச்செவியுற்ற சின்னபொம்மராஜன் மந்திரிகளில் சிலர்மூலமாக அம்மஹானைத்தனது நகரில் தங்கி அனுக்கிரஹிக்கும்படிச்செய்துகொள்ள நினைத்தான், பிறகு அவர்களில் மனதைக்

கவரச்செய்யும் இனிமையான மொழிகள் பேசும் திறமைவாய்ந்த பெரியோரை அனுப்பினான். அவர்கள் அப்படியே விரைவில் அடையப்பலஞ்சென்று, பெரியோரே?சின்னபொம்மராஜன் தான் யாகத்திற்குத்துணையாயிருந்து கைங்கர்யஞ்செய்யாமலிருந்தகுற்றத்தை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறான்! யாகமஹிமையைச் செவியுற்று. ஜன்மஸாபல்யத்தையடையும் பாக்கியத்தை இழந்தேனே என்றுஅடிக்கடி வேதனைப்படுகிறான். தனது புத்தியைச் சிலபகைவர் கெடுத்துவிட்டார்களே அவர்களின் வார்த்தையிலகப்பட்டு மோசம் போனேனேஎன்று பச்சாத்தாபம் அடைந்திருக்கிறான் அதுவே அப்பாபத்திற்கு ப்பிராயச்சித்தமாக இருக்கிறது. ஆனாலும் தங்களது கடாக்ஷத்தாலேயே தன்னைப்பாவனமாக்கிக் கொள்ள விரும்புகிறான் அவனால் அனுப்பப்பட்ட, பீதாம்பரத்தாலலங்கரிக்கப்பட்டதும், ஸுவர்ணப்பதுமைகளால் சோபிக்கப்பெற்றதுமான பல்லக்குமுதலியவை சன்னத்தமாயிருக்கின்றன. அனுக்கிரஹிக்கவேண்டும் என்று வணக்கத்துடன் மொழிந்தனர், அப்போது அவர்கள் மௌனமாயிருக்கவே மறுபடியும் அவர்களை நோக்கி மஹிமைபொருந்திய தீக்ஷிதமணிகளே? வெள்ளித்தடி பல்லக்குமுதலான பிருதுகள் பெற்றும் அனேக கன்னிகாதானம் செய்தவர்என்ற பிருதுபெற்றவராயும்உள்ள ஒருவர் படாடோபத்தோடு வேந்தனை வசப்படுத்தி வஞ்சித்துவிட்டார் அதனால் வேதமார்க்கத்தில்அவகம்பிக்கையும்,சிவத்வேஷமுமடைந்து புத்திமோஹமடைந்தான், சில ஸங்மந்திரிகளின் வார்த்தைகளால் வாஜபேய மஹிமையை யுணர்ந்து பச்சாத்தாபங்கொண்டு தங்களை தர்சிக்க ஆவலுள்ளவனாயிருக்கிறான் அவனுடைய வேண்டுகோளை யுண்மையாக அறிந்தே தங்களிடம் வந்திருக்கிறோம் தங்கள் முன்னோராலும் தங்களாலும் அநுக்கிரஹிக்கப்பெற்று விருத்தியடைந்த இவ்வாசன் மத்தியகாலத்தில் சிறிது தவறிவிட்டாலும் மன்னிக்கத்தக்கவன்என்று மீண்டும்விஞ்ஞாபித்துக்கொண்டனர். இவ்விதம் அவர்கள் கேட்டுக்கொண்டதை உண்மையென அறிந்துபின்பு வருவோம்என்று பதிலுரைத்து அனுப்பினர். அவர்கள் மஹாராஜனிடம் தெரிவிக்கவே சற்று சமாதானமடைந்து மறுபடியும் அவர்களையழைக்கும்படி அனேகர்களை யனுப்பினான், இப்படி பற்பல தடவை வேண்டப்பட்ட தீக்ஷிதாள் தமதுவருகையை அறிவித்தனர்.

17. தீக்ஷிதாள் வேலூர்சென்றது

நமது தீக்ஷிதமணிகள், சிஷ்யர்களின் ஜயகோஷத்தோடும், ராஜாங்கமரியாதைகளோடும், ஸஜ்ஜனங்களின் மனதைக்கவர்ந்து கொண்டு சிபிகையிலேறி வேலூருக்குப் புறப்பட்டனர். சின்ன பொம்மராஜன் முன்னமேயே தனது நகரத்தை தோரணங்களால் அலங்கரித்து ராஜவிதியின் முன்பக்கத்தில் அவர்களுக்கு திவ்ய ஆராமத்தில் ஓர் அழகிய விடுதியை அமைத்து அவர்களின் வருகையை எதிர்பார்த்திருந்தான். தீக்ஷிதமணிகள் மஹாவீதியில் பிரவேசிக்கும்போதே அவர்களின் விபூதிபூஷிதமான லலாடத்தையும் ருத்திராக்ஷமாலை அணியப்பெற்ற கண்டத்தையும் கண்டு பொறாமைகொண்ட சிவத்வேஷிகள்சூரியனைக்கண்ட கோட்டான்கள்போல் தங்கள்தங்கள் வீடுகளில் மறைந்தனர். மற்றும் சிலர் மஹாராஜாவை வசமாக்கின தங்கள் தலைவனிடம் இச்செய்தியைத் தெரிவித்தனர். அதைச்செவியுற்ற தாத்தாச்சாரியாரும் அரசனையணுகி முணுமுணுமந்திரமுபதேசிக்கத்தலைப்பட்டார். அப்போது அரசன் அதற்கிணங்காமல் தாமே அம்மஹானையழைக்கப்போகிறேன் என்கவே ராஜாச்ரயத்திற்கு பங்கம்வருமோ என்று ஐயங்கொண்டு தானும் ஒருவாறு ஸம்மதங்கொண்டவர்போல் நடித்து மஹாராஜனைப் பின்தொடர்ந்தார்.

சின்னபொம்மன் ராஜாங்கமரியாதைகளை முன்னிட்டு ஞான விருத்தர்கள், வயோவிருத்தர்கள், மற்றுமுள்ள மந்திரிவர்க்கங்கள் தாத்தாச்சாரியார் இவர்களோடு சென்று எதிர்கொண்டழைத்து முன்னமேயே அமைக்கப்பட்ட ஆராமத்துவிடுதியிலே அமரச்செய்து சரணகமலத்தில் விழுந்து எழுந்து பணிவுடன் தெரிவித்துக்கொண்டான்.

மஹானே! கதிரவனைக்கண்ட இருள்போல் தங்களைக்கண்ட எனது அறியாமை நீங்கிற்று. தாங்கள் இல்லாதகாலத்தில் பஸ்ம ருத்திராக்ஷத்வேஷிகளான சிலர் என்னை வஞ்சித்து ஏராளமான பொருளையும் பெற்றனர். என்னையும் சிவத்வேஷியாக்கினர். தங்கள் தர்சனத்தாலே பச்சாத்தாபப்படும் எனக்கு அப்பாபம் நீங்கிற்று. தாங்கள் என்னைச் சீடனாக்கிக்கொண்டு சிவதர்மங்களையும் சிவமஹிமையைத் தெளிவுறச்செய்யும் அரியபெரிய நூற்களையுமியற்றி லோகோபகாரஞ்செய்யவேண்டும்.

என்கவே தீக்ஷிதமணிகளும் குளிர்ந்த கடாக்ஷத்தால் அவனுக்கு தீக்ஷைசெய்து அநுக்கிரஹித்தார். அவரவர்களுக்குத்தக்க உபசாரத்துடனே தீக்ஷிதாளால் கௌரவிக்கப்பட்ட யாவரும் தங்கள் தங்களிருப்பிடம் அணுகினர்.

தீக்ஷிதாள் தமக்கு ஏற்படுத்தப்பட்ட அந்த விடுதியிலேயே தங்கி அக்கினிஹோத்திராதிகளைச் செய்துகொண்டு ஸத்காலக்ஷேபஞ்செய்வித்துக்கொண்டு முக்கண்ணனையாராதித்துவந்தார்

18. ஆபிசார ஜ்வரத்தைப்போக்கினது.

சின்னபொம்மனுக்கு தீக்ஷிதமணிகளிடம் பக்திமேலிடவே மற்ற விஷமிகள் ஒன்றுகூடி, ஆபிசாரஞ்செய்து, அந்தப்புரஸ்திரீகள், மற்றுமுள்ள சிவ பக்தர்கள் யாவருக்கும் சிகித்ஸை செய்ய முடியாததும், காலாக்கினிக்குச் சமமுமான கொடூரமான ஜ்வரத்தை ஏவினர். உடனே அந்தஜ்வரபீடையை ஸகியாத அவர்கள் வேந்தனிடம் முறையிட இதுஎன்னபுதுமை? அறிவாளிகளுக்குப் படிப்பினுல் நிகழும் பயன் இது தானு? படிப்புத்திறமை சிவத்வேஷத்தில் முடிந்ததே; இந்ததுரோகிகளின்நடத்தை நமது தீக்ஷிதாளிடம்எங்ஙனம் நிறைவேறும், அம்மஹானிடம்இச்செய்தியையறிவித்து உங்களது கவலையைத் தீர்ப்போம் என்று விடையளித்து, அந்தராஜன் தீக்ஷிதாளின் இல்லத்தையடைந்து ஸேதுவில் இராமனை விபீஷணுழ்வார்போல் அக்னிஹோத்திரசாலையினருகில் அம்மஹானை சரணமடைந்து, குருநாதனே! எனது பொருளையேகைக்கொண்டு எனக்கே ஆபிசாரத்தால் தீங்கிழைக்கின்ற விஷமிகளின் சேஷ்டையை நீக்கவேண்டும்என்று வேண்டினன். உடனே தீக்ஷிதாள் பரமசிவத்தை தியானித்து அப்படியே ஆகட்டும்என்று அவனை அனுப்பிவிட்டு, அதற்குறிய திரவியங்களைச் சேகரித்து அக்கினியில் ஹோமஞ் செய்யமுயன்ருர்.

दूर्वाग्राणि शिवाग्निषु प्रतिमनुं जुह्वन् घृताक्तानि सः
श्रेयः कारणमीश्वरं मनसि संवर्तानलाभं स्मरन् ।
लाजौघं तिलसंयुतं प्रमथिते वह्नौ नमोवः किरी-
त्येतेनैव जुहाव बिल्वफलपत्राणि श्रियः प्राप्तये ॥

உடனே நமது தீக்ஷிதாள் ஆரணியைக்கடைந்து எடுத்த அக்கினியில் காலாக்கினி ரூபியான சிவபெருமானைத்தியானித்து, அருகம்புல், பொறி, வில்வதளம், இவைகளை நெய்யில்நனைத்து, नमोव: किरि என்றமந்திரத்தை யுச்சரித்து, ஆரோக்யமுண்டாகட்டும் என்று ஸ்மரித்து, அவைகளை அவ்வக்கினியில் ஹோமஞ் செய்தார், உடனே அவர்கள் ஜ்வரம்நீங்கப்பெற்று ஆரோக்யமடைந்து தீக்ஷிதாளின் சரணாரவிந்தங்களில் நமஸ்கரித்துச் சென்றனர், அரசனும் தீக்ஷிதாளின் மஹிமையை மிகவும் மகிழ்ந்தான்.

19. விஷமிகளை குஷ்டர்களாக்கினது.

பிறகும் சிலவிஷமிகள் மயில்த்தோகையைக் கையில்பிடித்து மாயாபலத்தைப் பிரயோகிக்க நிபுணர்களான பாஷண்டர்களை வரவழைத்து இடையூறுசெய்யத்தலைப்பட்டார்கள் அதையறிந்த தீக்ஷிதாள், அரசனைப்பார்த்து இன்னும் எத்துணையோ விஷமச் செயல்கள் செய்ய சிலர் முயற்சியோடு இருக்கின்றனர் என்பதை முன்னமேயே உனக்கு அறிவிக்கிறேன் என்று அறிவித்தார்கள்.

ஒருஸமயத்தில் நமது தீக்ஷிதாள் சந்திரசூடனைப்பூஜித்து அந்தப் பூஜாசாலையை மூடிவிட்டு உள்ளே பிரவேசிக்கவே விரோதிகள் அப்பிரதேசத்தை துர்மந்திரப்பிரயோகத்தால் எலும்பு, ரக்தம், சாராயம், மாம்ஸம் இவைகளால் நிரம்பச்செய்தார்கள். உடனே அச்செய்தியையுணர்ந்த தீக்ஷிதாள் 'अध्यवोचदधिवक्ता' என்பதுமுதலான மந்திரங்களையுச்சரிக்கவே அந்தப்பிரதேசம் பாவனமாயும் சத்துருக்களின் இல்லமே அமேத்தியவஸ்துக்களால் நிறைந்ததாயுமாயிற்று. தவிரவும் அம்மந்திரத்தையுபயோகித்தவர்கள் குஷ்டரோகிகளானார்கள். இதையறிந்த யாவரும் ஆச்சர்யப்பட்டு "அம்மஹானையே மன்மதாராதியான பரமசிவன்" என்று உறுதிகொண்டார்கள்.

(தொடரும்)

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.